தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: திரு. மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப.(ஓ).,
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.003/ந/2022**

**நாள்.21.02.2022**

| | | |
|---|---|---|
| திரு.வே.கணபதி பாலசுப்பிரமணின்,<br>கடையநல்லூர் | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையாளர்,<br>கடையநல்லூர் நகராட்சி | – | எதிர்மனுதாரர் |

தென்காசி மாவட்டம், மேலக்கடையநல்லூர் , 3/9, பவுண்டு கீழத்தெரு, கடையநல்லூர் என்ற முகவரியில் வசிக்கும் திரு.வே.கணபதி பாலசுப்பிரமணியன் என்பவரின் 11.01.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.01.2022 அன்று பெறப்பட்டு 003/ந/20022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தென்காசி மாவட்டம், மேலக்கடையநல்லூர் , 3/9, பவுண்டு கீழத்தெரு, கடையநல்லூர் என்ற முகவரியில் வசிக்கும் திரு.வே.கணபதி பாலசுப்பிரமணியன் என்பவர் தமது மனுவில்:–

"தமிழக அரசு செயல்படுத்தி வரும் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் மற்றும் நகராட்சி நிர்வாகம் செயல்படுத்தி வரும் சட்டங்களை மதிக்காமல் கடையநல்லூர் நகராட்சியில் அதிகாரிகளும் ஒப்பந்தகாரர்களும் முறைகேடு செய்துள்ளனர். நகராட்சியின் வருமானத்தை கருத்தில் கொள்ளாமல் அளவிற்கு அதிகமாக டெண்டர் விடப்பட்டு மக்கள் வரிப்பணம் முறைகேடாக சுருட்டப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு கடந்த மூன்று ஆண்டுகளில் பொது நிதியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சாலை பணிகளில் நடந்த சில முறைகேடுகளை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வந்து தீர்வு காண விரும்புகிறேன்.

கடந்த 28.03.2018 அன்று பொது நிதியில் 3 கோடி ரூபாய்க்கும் மேல் ஒரே நேரத்தில் டெண்டர் விடப்பட்டுள்ளது என்று தெரிவித்து, அங்கீகாரம் செய்யப்பட்டுள்ள தீர்மான நகலையும் இணைத்துள்ளார். இந்த பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையரிடமோ, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனரிடமோ அனுமதியோ, ஒப்புதலோ பெறவில்லை. இந்த பணிகள் குறித்த

அறிவிப்பு மாநில, டெண்டர் புல்லட்டினிலோ தினசரி பத்திரிகைகளிலோ வெளியாகவில்லை, அத்துடன் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்களுக்கும் தெரியப்படுத்தப்படவில்லை. ரகசியமாக டெண்டர் வைத்து அதிகாரிகளும் குறிப்பிட்ட ஒப்பந்தகாரர்களும் முறைகேட்டில் ஈடுபட்டு திட்டமிட்டு மக்கள் வரிப்பணத்தை சூறையாடி உள்ளனர். இதே போல் பொது நிதி மூலம் 2018ம் ஆண்டு நவம்பர் மாதம் சுமார் 3 கோடி ரூபாய்க்கு டெண்டர் விடப்பட்டுள்ளது என்றும் அங்கீகாரம் செய்யப்பட்ட தீர்மான நகலையும் இணைத்துள்ளார்.

இதேபோல் கடந்த 2019ம் ஆண்டு ஜனவரி மாதம் 31ம் தேதி பொது நிதி மூலம் 3 கோடி ரூபாய்கான சாலை பணிகளும், ஜுலை மாதம் 17ம் தேதி, 2 கோடி ரூபாய் மதிப்பிலான சாலை பணிகளுக்கும் டெண்டர் விடப்பட்டுள்ளதாகவும், அவற்றுக்கான அங்கீகாரம் செய்யப்பட்ட தீர்மான நகல்களையும் இணைத்துள்ளார். ஆனால் இப்பணிகள் குறித்தும் மாநில, மாவட்ட டெண்டர் புல்லட்டினிலோ, தினசரி பத்திரிக்கைகளிலோ டெண்டர் விளம்பரம் செய்யப்படவில்லை. அத்துடன் பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களுக்கும் டெண்டர் நோட்டீஸ் அனுப்பப்படவில்லை. நகராட்சி நிர்வாகத்திற்கு 10 லட்சம் ரூபாய் வரை மட்டுமே தொழில் நுட்ப அனுமதி வழங்கிட தகுதியான நிலையில் பணிகளை தனித்தனியாக பிரித்து ஒரே நேரத்தில் பலகோடி ரூபாய்க்கு டெண்டர் விட்டு நகராட்சிக்கு நிதி இழப்பினை ஏற்படுத்தியுள்ளனர். நகராட்சி நிதியையும் நகர் மன்ற தீர்மானம் இயற்றும் அதிகாரத்தையும் தவறாக பயன்படுத்தி அதிகார துஷ்பிரயோகம் மற்றும் நிதி இழப்பினை ஏற்படுத்தியுள்ளார். இதுகுறித்து நான் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு புகார் அனுப்பினேன். ஆனால் நகராட்சி நிர்வாக ஆணையர் முறையான விசாரணை மேற்கொள்ளாமல் கடையநல்லூர் நகராட்சி ஆணையரிடமே பதிலறிக்கை அனுப்ப உத்தரவிட்டார். இது குறித்து கடையநல்லூர் ஆணையரின் பதில் ஏற்றுக்கொள்ளும்படி இல்லை என்றும் கடையநல்லூர் நகராட்சியில் அரசு விதிமுறைகளை கடைபிடிக்காமல் திட்டமிட்டே மக்கள் வரி பணம் சூறையாடப்பட்டுள்ளது. கடையநல்லூர் நகராட்சியில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ள நிலையில் உதாரணத்திற்காக சிலவற்றை குறிப்பிட்டுள்ளேன். தாங்கள் முழு விசாரணைக்கு உத்தரவிட்டால் பல ஊழல்கள் வெளிச்சத்திற்கு வரும். எனவே. தாங்கள் இது குறித்து விசாரணை மேற்கொண்டு முறைகேட்டில் ஈடுபட்டு மக்கள் வரிப்பணத்தை கொள்ளை அடித்தவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன் " என்று தெரிவித்துள்ளார்.

2) மனுதாரரின் மனு குறித்த அறிக்கையை அனுப்பி வைக்குமாறு 29.01.2022 நாளிட்ட இம்முறைமன்ற கடிதம் மூலம் கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டார். மனுதாரர் மற்றும் கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் ஆகியோரை 03.02.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது. 03.02.2022 அன்றைய நேரடி விசாரணையில் மனுதாரர் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"கடையநல்லூர் நகராட்சியில் சாலைப்பணிகளை மேற்கொள்வதற்காக 28.03.2018 அன்று 3 கோடி ரூபாய்க்கு மேல் ஒரே நேரத்தில் டெண்டர் விடப்பட்டுள்ளது. பலகோடி ரூபாய்க்கு டெண்டர் விட்டால் தினசரி நாளிதழ், டெண்டர் புல்லட்டின் ஆகியவற்றில் வெளியிட வேண்டும். அதை தவிர்க்கும் பொருட்டு பணிகளை 10 லட்சத்திற்கும் கீழ் தனித்தனியாக பிரித்து டெண்டர் விடப்பட்டுள்ளது. இந்த பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாகஆணையரிடமோ மண்டல இயக்குனரிடமோ அனுமதியோ அல்லது ஒப்புதலோ பெறவில்லை. மேற்கண்ட ஒப்பந்தம் குறித்து பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு தகவல் தெரியப்படுத்தவில்லை, ஒளிவு மறைவற்ற

ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் நகராட்சி சட்டங்களை மதிக்காமல் டெண்டர் விடப்பட்டுள்ளது. ரகசியமாகவே டெண்டர் அளித்து மக்கள் வரிப்பணம் சூறையாடப்பட்டுள்ளது.

மேற்கண்ட சாலைப்பணிகளை IUDM. TURIF ஆகிய நிதிகளிலிருந்து மேற்கண்ட பணிகளை நகராட்சியால் மேற்கொண்டிருக்கலாம். ஆனால், சாலைப்பணிகள் பொது நிதியிலிருந்து அவசர அவசரமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரிடமோ அல்லது மண்டல இயக்குநரிடமோ எவ்வித அனுமதியும் பெறப்படவில்லை. எனவே, மேற்கண்ட சாலைப்பணிக்கான ஒப்பந்ததாரும், நகராட்சி அலுவலர்களும் திட்டமிட்டே செய்துள்ளது கண்கூடாகத் தெரிகிறது.

எனவே இது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3) நகராட்சி ஆணையர் உள்ளாட்சி தேர்தல் பணிகளை கவனிப்பதால் ஆணையாளர் சார்பாக 03.02.2022 அன்றைய நேரடி விசாரணையில் கடையநல்லூர் நகராட்சி இளநிலைப் பொறியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோர் விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்தனர்.

"கடையநல்லூர் நகராட்சியில் நவம்பர் 2018–2019–ல் பல்வேறு இடங்களில் சாலைப்பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. இதன் மொத்த மதிப்பீடு சுமார் 3 கோடி ரூபாயாகும். கடையநல்லூரில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பழைய பகிர்மானக்குழாய்களை அப்புறப்படுத்தி புதிய குழாய்கள் பொருத்தும் பணி நடைபெற்றன. அதனால் சாலைகள் சேதமாகி சாலைகள் போக்குவரத்திற்கு தகுதியற்ற நிலையில் இருந்ததால் மேற்கண்ட சாலைப்பணிகளின் அவசர அவசியத்தை முன்னிட்டு பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிகள் குறித்து நகராட்சி அலுவலக அறிவிப்புப் பலகையில் தகவல் இடம் பெற செய்யப்பட்டது. மேலும், பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கும் ஒப்பந்தம் குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டன. இப்பணிகள் ஒவ்வொன்றும் ரூ 10 லட்சத்திற்கு கீழ் உள்ள மதிப்பீடு என்பதால், தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்படவில்லை. மேலும் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையரிடமோ அல்லது மண்டல இயக்குநரிடமோ அனுமதி பெறவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், கடையநல்லூர் நகராட்சி ஆணையரின் 01.02.2022 நாளிட்ட கடிதத்தையே எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளுமாறு இம்முறைமன்றத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம் " என்று தெரிவித்தனர்.

4) இது தொடர்பாக கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் தமது 01.02.2022 நாளிட்ட அறிக்கையில், "புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு 28.03.2018 நவம்பர்/2018, 31.01.2019 மற்றும் 17.07.2019 ஆகிய தேதிகளில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் ரு.10.00 இலட்சத்திற்கும் கீழ் உள்ள மதிப்பிலான பணிகள் என்பதால் அரசாணை (MS) எண்.243, நாள் 21.08.2017–ல் வழிகாட்டியுள்ளவாறு தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்படவில்லை. மேலும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் அனைத்தும் நகராட்சியில் பதிவு செய்துள்ள தகுதிப்பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு சார்பு செய்யப்பட்டுள்ளதுடன் அலுவலக விளம்பர பலகையிலும் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. கடையநல்லூர் நகராட்சிப்பகுதி பொதுமக்களின் குடிநீர் விநியோக தேவையினை

கருத்திற்கொண்டு தமிழக அரசால் 2010–2011–ஆம் ஆண்டில் குடிநீர் அபிவிருத்தி திட்டம் அனுமதிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பழைய பகிர்மான குழாய்களை அப்புறப்படுத்தி விட்டு புதிய பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணிகள் 83.13 கி.மீ. நீளத்திற்கு 2016–2017–ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இதனால் சாலைகள் யாவும் போக்குவரத்திற்கு தகுதியற்ற நியைில் இருந்துள்ளதுடன், இப்பணிகளில் நகரின் அனைத்து பகுதியிலுள்ள சாலைகள் குண்டும் குழியுமாகவும் அதன் தொடர்ச்சியாக பெய்த மழையினால் சாலைகள் மேலும் பழுதடைந்து போக்குவரத்திற்கும் மிகவும் இடையூராக இருந்ததால் பொதுமக்களிடம் அரசு மற்றும் நகராட்சி நிர்வாகத்திற்கும் மிகுந்த அவப்பெயர் ஏற்பட்டு வந்த நிலையில் பொதுமக்களின் கோரிக்கைக்கேற்பவும் மாண்புமிகு தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர், கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் ஆகியோர் நேர்முகமாக அழுத்தம் கொடுத்து அறிவுறுத்தியதற்கிணங்கவும், மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் நேர்முக அறிவுரைக்கேற்பவும் போக்குவரத்து அவசியம் கருதியும் மிகவும் மோசமான நிலையிலிருந்த சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளது. தோண்டப்பட்ட சாலைகளை சீரமைக்க குடிநீர் அபிவிருத்தி திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாததால் பொது நிதியின் கீழ் நிதி நிலமைக்கேற்ப சாலைப்பணிகள் சீரமைக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

5) இம்மனு தொடர்பாக மனுதாரின் மனு அவரது வாக்குமூலம், ஆணையாளரின் அறிக்கை, நகராட்சி இளநிலை பொறியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

28.03.2018 நவம்பர்/2018, 31.01.2019 மற்றும் 17.07.2019 ஆகிய தேதிகளில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் ரூ.10.00 இலட்சத்திற்கும் கீழ் உள்ள மதிப்பிலான பணிகள் என்பதால் அரசாணை (MS) எண்.243, நாள் 21.08.2017–ல் வழிகாட்டியுள்ளவாறு தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்படவில்லை. மேலும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் அனைத்தும் நகராட்சியில் பதிவு செய்துள்ள தகுதிப்பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு சார்பு செய்யப்பட்டுள்ளதுடன் அலுவலக விளம்பர பலகையிலும் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. கடையநல்லூர் நகராட்சிப்பகுதி பொதுமக்களின் குடிநீர் விநியோக தேவையினை கருத்திற்கொண்டு தமிழக அரசால் 2010–2011–ஆம் ஆண்டில் குடிநீர் அபிவிருத்தி திட்டம் அனுமதிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பழைய பகிர்மான குழாய்களை அப்புறப்படுத்தி விட்டு புதிய பகிர்மான குழாய்கள் அமைக்கும் பணிகள் 83.13 கி.மீ. நீளத்திற்கு 2016–2017–ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இதனால் சாலைகள் யாவும் போக்குவரத்திற்கு தகுதியற்ற நிலையில் இருந்துள்ளதுடன், இப்பணிகளில் நகரின் அனைத்து பகுதியிலுள்ள சாலைகள் குண்டும் குழியுமாகவும் அதன் தொடர்ச்சியாக பெய்த மழையினால் சாலைகள் மேலும் பழுதடைந்து போக்குவரத்திற்கும் மிகவும் இடையூராக இருந்ததால் பொதுமக்களிடம் அரசு மற்றும் நகராட்சி நிர்வாகத்திற்கும் மிகுந்த அவப்பெயர் ஏற்பட்டு வந்த நிலையில் பொதுமக்களின் கோரிக்கைக்கேற்பவும் மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி அவர்களின் நேர்முக அறிவுரைக்கேற்பவும் போக்குவரத்து அவசியம் கருதியும் மிகவும் மோசமான நிலையிலிருந்த சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள ஆணையரின் அறிக்கையை ஏற்க இயலாது. மேலும் கடையநல்லூர் நகராட்சியானது முதல்நிலை (First Grade) நகராட்சியாகும். முதல் நிலை நகராட்சிக்கு அரசு ஆணை (டி) எண்.334, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.08.2016ல் முதல்நிலை நகராட்சிக்கு ஆணையருக்கு கட்டுமானப்பணிகளுக்கு (civil work) ரூ.40 லட்சம்

அளவில் மட்டுமே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனையும் கவனத்தில் கொள்ளமால் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநரிடமோ அல்லது மண்டல இயக்குனரிடமோ எவ்வித முன்அனுமதியும் பெறாமல் நகராட்சி பொது நிதியின் கீழ் மிகபெரிய அளவில் டெண்டர் கோரி தன்னிச்சையாக செயல்பட்டதை ஏற்க இயலாது. இச்செயலை அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி நிர்வாகத்தை சீரழிக்கும் செயலாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே, விதிமுறைகளுக்கு புறம்பாகவும் தன்னிச்சையாகவும் செயல்பட்ட, சம்மந்தப்பட்ட அனைத்து அதிகாரிகள் மீது துறைரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. வே.கணபதி பாலசுப்பிரமணியன்,
3/9, பவுண்டுக் கீழத்தெரு,
மேலக்கடையநல்லூர், கடையநல்லூர் – 627 751.

2) ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி,
கடையநல்லூர்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை –28.

4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

22/2/22

செயலாளர்.

22/02/22